# ஜெம்ஸ் சத்தம்

Since 1972

ஏப்ரல் 2023



**விசுவாசம் இல்லாமல்
தேவனுக்குப் பிரியமாயிருப்பது
கூடாதகாரியம்;**

ஏனென்றால், தேவனிடத்தில்
சேருகிறவன்
அவர் உண்டென்றும்,
அவர் தம்மைத்
தேடுகிறவர்களுக்குப் பலன்
அளிக்கிறவரென்றும்
விசுவாசிக்க வேண்டும்.

எபிரேயர் 11:6




2023-ம் ஆண்டின் விடுமுறை வேதாகமப் பள்ளி இயக்குநர்களுக்கான பயிற்சி முகாம், மார்ச் 2,3,4 ஆகிய நாட்களில் சிக்காரியாவில் நடைபெற்றது. ஜெம்ஸ் பணித்தளங்களைச் சேர்ந்த 205 சகோதர சகோதரிகள் இதில் பங்கேற்றனர்.

# ஜெம்ஸ் சத்தம்

*Since 1972*

*Transforming Peoples to Transform Nations*

அன்பின் மடல் – 4

சகோ. D. அகஸ்டின் ஜெபக்குமார்

உண்மையுள்ள தேவன் – 11

பணித்தளச் செய்திகள் – 17

முன்னேற்றப் பணி முகவரிகள் – 29

Gen-NEXT அர்ப்பணிப்பு – 31

*Published by*

**GEMS Educational and Media Services**

14/1, Jeba Nagar, Vasanthapuram South,
Near Vijaya Garden, Tirunelveli 627005
Ph. : 9488771655
E-Mail : media@gemsbihar.org

*Published for*

**Gospel Echoing Missionary Society**

11, 13th Cross Street, New colony
Chrompet, Chennai - 44
Ph. : 044-22386031, 044-22380295

*Field office*

GEMS, Sikaria, Indrapuri - 821308
Rohtas Dist., Bihar , Ph. : 06184 - 234567
(Railway station & courier centre : Dehri on Sone)
Website : www.gemsbihar.org
E-mail : gems@gemsbihar.org

## 'ஜெம்ஸ்' என்பது,

*Gospel Echoing Missionary Society*

விசுவாச இளைஞர்கள் சிலரால் 1972-ம் ஆண்டு நிறுவப்பட்டு, 1979-ம் ஆண்டு பதிவு செய்யப்பட்ட ஓர் ஊழியம்.

பீஹார் மற்றும் அதன் அண்டை மாநிலங்களில் உள்ளோரைச் சந்திப்பதே இவ்வூழியத்தின் பிரதான தரிசனம். அத்துடன், ஊழியர்களைப் பயிற்றுவிக்கும் பணியினையும், திருச்சபைகளை ஸ்தாபிக்கும் பணிகளையும் தொடர்ந்து செய்துவருகின்றது. பீஹார், ஜார்க்கண்ட், உத்திரப்பிரதேசம், மத்தியப்பிரதேசம் மற்றும் மஹாராஷ்டிரா மாநில மக்களுக்கு நற்செய்தியினை அறிவிப்பதுடன், அண்டை நாடுகளில் நடைபெறும் ஊழியங்களையும் ஊக்குவித்துவருகின்றது. ஆதிவாசி மக்களைச் சந்திப்பது, குழந்தைத் தொழிலாளர்கள், ஆதரவற்ற குழந்தைகள் மற்றும் ஊனமுற்றோரை மறுவாழ்வு மையங்களில் ஆதரிப்பது, மருத்துவ சேவை அளிப்பது, கல்வியினால் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவது போன்ற ஊழியங்களால் உன்னதரை உலகிற்கு அறிவித்துவரும் ஓர் மிஷனரி ஊழியம்.



# அன்பின் மடல்

கிறிஸ்துவுக்குள் அன்பான ஜெபப் பங்காளரே,

கர்த்தருக்குப் பயப்படுகிற சிறியோரையும் பெரியோரையும் ஆசீர்வதிக்கிற ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துகள் (சங். 115:13). **யுத்தம் வாசல் வரை வந்ததனை** காண்கிற இந்த நாட்களில் (நியா. 5:8), நம்முடைய செயல்பாடுகளைக் குறித்து வேதத்தில், நியாயாதிபதிகளின் புத்தகத்தில் தெளிவாக ஒரு காரியத்தினை தேவன் நமக்குக் கற்றுக்கொடுத்துள்ளார். **அதுவே இன்றையத் தேவை** என்பதனை உணர்ந்தவர்கள் எத்தனை பேரோ! அதனைக் கொஞ்சம் விபரமாகக் கூறினால் ஆவிக்குரிய உலகிற்கு பிரயோஜனமாக இருக்கும் என நம்பி, இந்த மடலை எழுதுகிறேன்.

எகிப்திலிருந்து வேறு பிரிக்கப்பட்டு, 'என்னையல்லாமல் உனக்கு வேறே தேவர்கள் உண்டாயிருக்கவேண்டாம்' (யாத். 20:3; உபா. 5:7) என்று திட்டமாய் அவர்களுக்குக் கட்டளை கொடுத்து, 'சகல ஜனங்களிலும் நீங்களே எனக்குச் சொந்த சம்பத்தாயிருப்பீர்கள்; பூமியெல்லாம் என்னுடையது.

நீங்கள் எனக்கு ஆசாரிய ராஜ்யமும் பரிசுத்த ஜாதியுமாய் இருப்பீர்கள்' (யாத். 19:5,6) என்று சொல்லி, **தன்னுடைய இருதயத்தின் வாஞ்சையை** தேவன் வெளிப்படுத்தியிருந்தும், நடக்கவேண்டிய வழிகளுக்கான சட்டதிட்டங்களை தன் சொந்த விரலினால் எழுதிக்கொடுத்திருந்தும், 'நூதன தேவர்களைத் தெரிந்துகொண்டார்கள்' (நியா. 5:8) எனவே **யுத்தம் வாசல் வரை வந்தது**.

கானான் தேசத்தில் நடந்த சகல யுத்தங்களையும் அறியாதிருந்த இஸ்ரவேலராகிய அனைவரையும் **சோதிப்பதற்காகவும்,** இஸ்ரவேல் புத்திரரின் சந்ததியாரும் அதற்கு முன் யுத்தஞ் செய்ய அறியாதிருந்தவர்களும் **அவைகளை அறியும்படி பழக்குவிப்பதற்காகவும்** கர்த்தர் ஜாதிகளை விட்டுவைத்திருந்தார் (நியா. 3:1,2). ஆனால், இஸ்ரவேல் புத்திரர் திரும்பத் திரும்ப கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்ததினால், யாபீன் என்ற கானானிய அரசனை தேவன் சிசெராவின் கீழ் படையெடுக்க அனுப்புகிறார். (நியா. 4:1,2; 3:3,12)

**இன்றைக்கும் நம் நடுவே தேவனைத் தவிர அநேக நூதன தேவர்கள் உண்டாயிருக்கவில்லையோ. பணம் அநேகருக்குத் தேவன்** (லூக். 16:13), **வயிறு அநேகருக்குத் தேவன்** (பிலி. 3:19). **நூதன விஞ்ஞானக் கண்டுபிடிப்புகளான செல்போன் அநேகருக்கு முதலிடம் வகிக்கும் தேவன்**; ஏனெனில், அதனாலேயே ஆளப்படுகிறார்கள். **எது நம்மை ஆளுகிறதோ, அதற்கு நாம் அடிமைகள் மாத்திரமல்ல, அதுவே தேவனாகவும் மாற்றப்பட்டுவிடுகிறது.** 'என்னையல்லாமல் உங்களால் ஒன்றும் செய்யக்கூடாது' என்றார் இயேசு (யோவான் 15:5). **இன்று செல்போன் இல்லாமல் எதுவும் செய்யக்கூடாதபடிக்கு இந்த சந்ததி தள்ளப்பட்டுவிட்டதே.**

இஸ்ரவேலின் ஆயுதங்கள் நாற்பதினாயிரம் பேருக்குத்தானும் போதவில்லை (நியா. 5:8); ஆனால், 900 இருப்பு இரதங்களைக் கொண்டவனோடு (நியா. 4:3) யுத்தம் செய்யவேண்டிய நிலை. இன்றும் சபையின் நிலை அதுதானே? **யுத்தத்திற்குப் பயிற்சி பெற்றவர்களும்** (ஆவிக்குரிய யுத்தம்) **இல்லை. ஆயுதமும் போதாது, ஆட்களும் போதாது.** (லூக். 10:2)

இதனால் ஏற்பட்ட தாக்கம், கிராமங்கள் பாழாயின. வழி நடக்கிறவர்கள் பெரும்பாதை பாழாயிருந்ததினால் பக்கவழியாய் நடந்தார்கள் (நியா. 5:6,7); ஆனால், இதனைக் கண்ட ஒரு சிறு கூட்டம் செயல்பட எழுந்தது (நியா. 5:7). மனப்பூர்வமாய்க் ஒப்புக்கொடுத்த ஒரு கூட்டம் அது (நியா. 5:2), அதிபதிகளாலும் நிறைந்திருந்தது (நியா. 5:9), எழுதுகோலைப் பிடிக்கிறவர்களையும் விடவில்லை (நியா. 5:14), தங்கள் உயிரையும் எண்ணாமல் மரணத்துக்குத் துணிந்து நிற்கும் கூட்டம். (நியா. 5:18)

**ஆண்டவரும் இணைந்துகொண்டார்** (நியா. 5:20), நதியின் வெள்ளங்களும் இணைந்துகொண்டன. அதாவது, இயற்கையும் இணைந்துகொண்டது (நியா. 5:21). **கடைசி நாட்களிலும் இப்படித்தானே இருக்கும்**. (வெளி. 12:16)

**உற்சாகப்படுத்த ஒரு தெபோராள் இன்றும் தேவை** (நியா. 4:6,7). **தேவன் செய்ய விரும்புவதனைச் சொல்லத்தானே இன்றும் ஆட்கள் தேவை.** ஒருவேளை ஏவிவிட்டு தங்கள் ஒரு விரலாலும் தொடாமல் இருக்கிறவர்கள் உண்டே (மத். 23:4,5). மனுஷர் காணும்படி மாத்திரம் வாய்ச்சொல் வீரர்கள் எத்தனை எத்தனை! ஆனால், தெபோராள் அப்படியல்லவே. பெண் என்றும், குடும்ப வாழ்க்கை தன்னைத் தடுத்திடும் அல்லது கணவன் என்னை நிறுத்திவிடுவான் என்ற சாக்குப்போக்குக்கு இடமேயில்லையே. (நியா. 4:5,9)

**தேவ சத்தம் கேட்கவும்**, **அதனை மற்றவர்களுக்குச் சொல்லவும், அவர்களை செயல்படச் செய்யவும்**, **கூடுமானவரை உடன் நிற்கவும் உதவுகிற தீர்க்கதரிசனச் சத்தம் இன்றும் சபைக்குத் தேவையல்லவா**! ஏராளமான சத்தங்கள் கேட்கிறது; ஆனால், இது தேவ சத்தம் என்று சொல்லக்கூடாதபடி, அது கூச்சலாகத்தானே இருக்கிறது. (There are noises but the voice is missing) **கட்டளையிட ஆட்கள் உண்டு; ஆனால், இறங்கி செயல்பட்டு கைகளை அழுக்காக்க ஆயத்தமானோர் இல்லையே!** (not willing to soil their hands).

**பாராக் போன்ற மனிதர்கள் உயிரையும் பணையம் வைக்க ஆயத்தம்** (நியா. 4:6; 5:18). **ஆனால், கூடவே உடன் நடந்து இயக்குவிக்கும்**

**தலைவர்கள் எங்கே?** (நியா. 4:10). பெய்த மழையினால் சமபூமியனைத்தும் சேறாகிவிட்டதால், இருப்பு இரதங்களின் சக்கரங்கள் அதில் மாட்டிக்கொள்ள, சிசெராவும் இரதத்திலிருந்து ஜீவன் தப்ப இறங்கி ஓடவேண்டியதாயிற்று (நியா. 4:15); **என்னே கர்த்தரின் கிரியை**!!

ஆனால், மற்றொரு கூட்டம்,

**ரூபனின் பிரிவினை – ஏன் மந்தைகளை விட்டு விட்டுப் போக மனதில்லை?** அந்த மந்தையின் சத்தத்தில் இருக்கவே ஆசை. தன்னுடையவைகளைப் பாதுகாத்து, அதின் பலனைப் புசிக்கவேண்டும் என்பதிலேயே கவனம். (நியா. 5:15,16)

**கீலேயாத் மனுஷர் –** அக்கரைக்குச் செல்லவோ, தன்னுடைய வசதிகளை விட்டு (comfort area) செல்லவோ மனமில்லை. (நியா. 5:17)

**தாண் மனுஷர்**, **ஆசேர் மனுஷர் –** தங்கள் வேலைகளை விட மனதில்லை. யுத்தம் நடக்கும் காட்சியைக்குறித்து கேட்கவும் **விரும்பாதவர்கள்**.

**மேரோசின் குடிகள் –** கர்த்தரின் பட்சத்தில் துணை நிற்க வரவில்லை. செய்யவேண்டியதனைச் செய்யாததால், சாபத்தினை இந்தக் குடியினர் சம்பாதிக்கிறார்கள். (நியா. 5:23)

இதன் மத்தியிலும், தேவன் செய்கிற கிரியைகளைக் கவனித்தால் எத்தனை ஆச்சரியமாயிருக்கிறது. **தேவனே எதிரியை இழுத்துக்கொண்டுவருகிறார்** (நியா.4:7). கர்த்தர் தம்மில் அன்புகூருகிறவர்களை, வல்லமையோடே உதிக்கிற சூரியனைப் போல இருக்க மாற்றுகிறவர் (நியா. 5:31) என்பதும் வெளிப்படுகிறதே.

இதற்கு மத்தியில் யாகேலுக்கு யார் சொல்லிக்கொடுத்தார்கள், எதிரியை தீர்த்துக்கட்டுவதற்கு? அவளைக் குறித்து தீர்க்கதரிசனம் வந்ததனை யார் அவளுக்குச் சொன்னது? (நியா. 4:9). இத்தனை தைரியம் எப்படி வந்தது? தனியாக ஒரு படைத்தளபதியையே கொன்றுபோட்டாளே! இது **தேவன் அல்லாமல் யார் செய்திருக்கக்கூடும்**.

இவை அனைத்தையும் நன்றாக உற்றுக் கவனிக்கும்போது, இன்றைய சூழ்நிலையிலும் ஒரு சிறு கூட்டம் தேவனுக்குத் தேவை.

**தேவனுடைய செயலைக் கண்டு, தன் ஜனத்திற்கு அதனைக் கூறி, யார் இதனை முன்நின்று நடத்துவது என்று அடையாளம் காட்டிக்கொடுத்து, அவர்களை உற்சாகப்படுத்தி, செயல்படுத்த உதவி செய்ய, உடன் இருக்கும் தீர்க்கதரிசிகள் இன்று எங்கே!** தன்னை தீர்க்கதரிசி என்று தம்பட்டம் அடித்துக்கொள்ளுகிறவர்கள் இன்று ஏராளம்.

போதாக்குறைக்கு, **"தீர்க்கதரிசன ஜெபம் செய்வது எப்படி?"** என்று சொல்லிக்கொடுக்க வகுப்புகளை நடத்தி, அதற்கு கட்டணம் வசூலிக்க ஆயத்தமாகிவிட்ட ஓர் கூட்டம் நம்முடைய சிந்தைகளை வேதனைக்குள்ளாக்குகிறது. **தேவனுடைய திட்டங்களை அறியாமல், தன்னுடைய திட்டங்களை தேவ திட்டங்கள் என்று பறைசாற்றி, கூவிக் கூவி விற்பவர்கள்** நம் நாட்களில் பெருகிவருகின்றனரே. அதற்குக் காரணம் 'தீர்க்கதரிசனம், தீர்க்கதரிசனம்' என்று அலைமோதிக்கொண்டிருக்கிற விசுவாசிகளே. **தேவன் தேசத்தில் செய்யவிரும்புவதனைக் காணாமல், தன்னைக் குறித்தும், தன்னுடைய தேவையை மாத்திரம் குறித்தும் அதிக அக்கறை கொள்வோர் இருக்கும்வரை இது இப்படித்தான் இருக்கும்.** தேவன் நமக்கு இரங்குவாராக.

தேசத்தின் தேவையைக் கண்டவளும், சந்தர்ப்பம் கிடைத்தால் உடனே செயல்பட்டவளுமாகிய யாகேல், தனியாகவே நின்று சாதிக்க அறிந்தவள். அடிமைத்தனத்திற்கு முற்றுப்புள்ளி வைத்தவள் அவள்தானே. **கூடாரத்தில் தங்கியிருந்தாலும், தனக்கும் யுத்தத்தில் வெற்றிவாகை சூட வாய்ப்பு கிடைத்துவிட்டதே என்று எத்தனையாய் மகிழ்ந்திருப்பாள்.** கூடாரவாசிதான்; ஆனால், அது அவளை அடக்கிவைக்க முடியவில்லையல்லவா? தன்னைத் தேடியே சத்துருவை வரவழைப்பார் தேவன் என்று அவளுக்குத் தெரியாதே! தன்னுடைய காலடியிலே சத்துருவின் மரணம் என்ற அந்த மாபெரும் காட்சிதனை அவள் முன்னறியவில்லைதான்; **தன்னைக் குறித்துச் சொல்லப்பட்ட வார்த்தைகள் அவளுடைய காதுகளில் வந்து எட்டுமுன்னே, செயலில் சாதித்துவிட்டாளே!**

அவரவருக்கு தேவன் தந்திருப்பவைகளை ஒன்றுசேர்ப்போம். இணைந்து செயல்படுவோம், எது வாய்க்குமோ நமக்குத் தெரியாதே!

**துணை தேடுவோருக்கு துணைசெய்வோம், தைரியமற்றவரை தாங்கிப்பிடிப்போம்,** எழுதுகோல் பிடித்தோரும் எழும்பிவரட்டும், எதிரியை விரட்ட அடிமைத்தனம் நீங்க, **இணைந்தால் இன்பம், இசைந்து செயல்பட்டால்** இறைமகன் இயேசுவும் கூடவே செயல்படுவாரே, வெற்றிக் கனியும் உண்டே.

ஒட்டுமொத்தத்தில், ஒருமிக்க மனப்பூர்வமாய்ச் செயல்படக்கூடிய ஒரு சிறு கூட்டம் ஆண்டவருக்குத் தேவை. **தேவனால் இயக்குவிக்கப்படும் அந்த கூட்டத்தில், ஒரு பேதையான பெண்ணுக்கும் இடம் உண்டு, எழுத்தர்களுக்கும் இடம் உண்டு, தீர்க்கதரிசியும் அங்கே உண்டு, தலைமைப் பொறுப்பை ஏற்க ஆயத்தமாக்கப்பட்டவனும் அதில் உண்டு, பிரபுக்களுக்கும் அதிபதிகளுக்கும்கூட அங்கே இடம் உண்டு, பட்டயம் ஏந்தும் பத்தாயிரம் பேருக்கும் இடம் உண்டு, அந்த கூட்டம் ஜெயித்துதான் ஆகும். ஏனெனில், தேவன் திட்டம்பண்ணின யுத்தமுறை அது. வீட்டின் வாசலுக்கு வந்த யுத்தம்** (நியா. 5:8)**, வானமண்டலத்திற்கு மாற்றப்பட்டது** (நியா. 5:20). **கழுகு பாம்பு ஒன்றை தரையில் வைத்து தாக்குவதில்லை; மாறாக, ஆகாயத்தில் எடுத்துச் சென்று அதனை மூச்சுத் திணறவைத்து சாகடித்துவிடுகிறது. இதுதான் ஆகாய மண்டலத்தில் யுத்தங்களை நடத்தக் கற்றுக்கொண்டவரின் முறை** (எபே. 6:12). **தரையின் யுத்தத்தினை வானமண்டலத்திற்கு மாற்றக் கற்றுக்கொள்ளுவோம் (வெளி. 12:7); அதுதானே தேவனின் முறை.** (தானி. 10:13,21)

**இன்று இந்திய மண்ணில் எதிரியின் சூழ்ச்சியினைக் கண்டு கதறும் இந்தியத் திருச்சபை, இந்த முறைதனைக் கற்றுக்கொள்வது எத்தனை அவசியம். மாறாக, மானிட முறைகள் கையாளப்படுகிறது. மாநாடுகள் நடத்துவதால் அது நடைபெறப்போவதில்லை, கூட்டம்தனைக் கண்டு சத்துரு கலங்குவதில்லை அல்லது வெற்று ஆர்ப்பரிப்பினைக் கண்டு அவன் கலங்குவதில்லை.** (1சாமு. 4:5–7). **கற்றுக்கொள்ளுவோம், களம் இறங்குவோம் முழங்காலில்.**

மனப்பூர்வமாய் ஒப்புக்கொடுத்ததும்
விண்ணகம் இயக்கும் சிறு கூட்டம்
மன்னவன் இயேசுவுக்கு இன்றைக்கும்
விண்ணின் முறைதனை தனதாக்கட்டும்

சிறியவனுக்கும் பெரியவனுக்கும் அங்கே
பங்கு கிடைக்குமே ஒப்புக்கொடுத்தால்
சீறிவரும் சத்துருவினைக் கண்டிடாமல் இங்கே
ஏங்கும் குரல்களை கேட்டிடும் தேவனைச் சார்ந்தால்

தரையில் நின்று யுத்தம் நடத்திடாதே
வான் நட்சத்திரங்களும் இணைவதனைப் பார்
வரையறுயில்லையே அவரின் முறைகளுக்கு
கானம் பாட முடியுமே வெற்றிக் கீதமாய்

தீர்க்கர் எழும்பிட தலைவனும் எழும்புவாரே
அதிபதிகளும் பிரபுக்களும் அதிவேகமாய்
தீவிரம் காட்டுவாரே தேவப் பணியிலே
அணிவகுக்கும் இந்த கூட்டம் போதுமே

மந்தையின் சத்தம் கேட்க தங்கிவிட்ட கொடுமை
சுகவாழ்வு சுகபோகம் போகணுமே
மமதையின் உச்சம் மாற்றானைக் காண மறுக்குதே
சக ஊழியனை இணைத்து செயல்பட இயலைையே

சிந்தைகொள்வோம் கற்றுக்கொள்வோம்
தேவ முறைதனை தேவனின் நேரத்தினையும்
பந்தையப் பொருளின் மேல் கண்கள் பதித்திட
தேசம் தேவனை அறிவது நிச்சயமே

அன்பரின் அறுவடைப் பணியில்
சகோ. D. அகஸ்டின் ஜெபக்குமார்

# உண்மையுள்ள தேவன்

சகோ. D. அகஸ்டின் ஜெபக்குமார்

**"தேவன் உண்மையுள்ளவர்"** என்பதை முழு நிச்சயமாக நாம் விசுவாசித்தால் மாத்திரமே, நம்முடைய வாழ்க்கையின் ஒவ்வொரு அடியினையும் தேவனுக்குப் பிரியமானதாக நாம் வடிவமைத்துக்கொள்ளமுடியும். "**என்னாலே செய்யக்கூடாத அதிசயமான காரியம் ஒன்றுண்டோ?**" (எரே. 32:27) என்று கேட்கும் தேவனிடத்திலிருந்து, கேட்பவைகளை நாம் பெற்றுக்கொள்ளத் துணை நிற்பது நம்மிடத்தில் வெளிப்படும் விசுவாசமே. விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாதகாரியம்; ஏனென்றால், தேவனிடத்தில் சேருகிறவன் அவர் உண்டென்றும், அவர் தம்மைத் தேடுகிறவர்களுக்குப் பலன் அளிக்கிறவரென்றும் விசுவாசிக்கவேண்டும் (எபி. 11:6) என்று வாசிக்கின்றோமே; விசுவாசமில்லாமல், தேவனுக்குப் பிரியமாயிருப்பது மாத்திரமல்ல, நாம் வேண்டிக்கொள்ளுவதற்கான பதிலையும் தேவனிடத்திலிருந்து பெற்றுக்கொள்வது கூடாதகாரியமே.

ஆபிராம் தொண்ணூற்றொன்பது வயதானபோது, கர்த்தர் ஆபிராமுக்குத் தரிசனமாகி, நான் சர்வவல்லமையுள்ள தேவன்; நீ எனக்கு முன்பாக நடந்து கொண்டு உத்தமனாயிரு. நான் உனக்கும் எனக்கும் நடுவாக என் உடன்படிக்கையை ஏற்படுத்தி, உன்னை மிகவும் திரளாய்ப் பெருகப்பண்ணுவேன் (ஆதி. 17:1,2) என்று சொன்னபோது, ஆபிரகாம் முகங்குப்புற விழுந்து நகைத்து: நூறுவயதானவனுக்குப் பிள்ளை பிறக்குமோ? தொண்ணூறு வயதான சாராள் பிள்ளை பெறுவாளோ? என்று தன் இருதயத்திலே சொல்லிக்கொண்டு, இஸ்மவேல் உமக்கு முன்பாகப் பிழைப்பானாக என்று தேவனிடத்தில் விண்ணப்பம்பண்ணுகின்றான் (ஆதி 17:17,18). தனது சீரத்தின் பெலன் அற்றுப்போய்விட்டது, மனைவியாகிய சாராளும் வயது சென்றவளாகிவிட்டாள், பிள்ளையைப் பெற்றெடுக்கும் பெலன் அவளுக்கு இல்லை; இப்படிப்பட்ட நிலையில் இது எப்படி சாத்தியமாகும் என்று நினைத்ததினாலேயே, கர்த்தருடைய வார்த்தைகளைக் கேட்டதும்

ஆபிரகாம் 'முகங்குப்புற விழுந்து நகைக்கின்றான்'. என்றபோதிலும், தேவன் ஆபிரகாமை நோக்கி, 'உன் மனைவியாகிய சாராள் நிச்சயமாய் உனக்கு ஒரு குமாரனைப் பெறுவாள், அவனுக்கு ஈசாக்கு என்று பேரிடுவாயாக; என் உடன்படிக்கையை அவனுக்கும் அவனுக்குப் பின்வரும் அவன் சந்ததிக்கும் நித்திய உடன்படிக்கையாக ஸ்தாபிப்பேன்' (ஆதி. 17:19) என்று கூறுகின்றார்.

பின்பு ஒருநாள், பகலின் உஷ்ணமான வேளையில், கூடார வாசலிலே ஆபிரகாம் உட்கார்ந்திருந்தபோது, ஆபிரகாம் தன்னை நோக்கி வந்த மூன்று புருஷர்களை வரவேற்று, தனது கூடாரத்திற்கும் அவர்களை அழைத்துச் சென்று உபசரித்து, உணவு கொடுத்தபோது, 'ஒரு உற்பவகாலத்திட்டத்தில் நிச்சயமாய் உன்னிடத்திற்குத் திரும்ப வருவேன்; அப்பொழுது உன் மனைவியாகிய சாராளுக்கு ஒரு குமாரன் இருப்பான்' என்று அவர் சொன்னபோது, பின்புறமாய்க் கூடாரவாசலில் இதைக் கேட்டுக்கொண்டிருந்த சாராள் (ஆதி. 18:10), தன் உள்ளத்திலே நகைத்து: நான் கிழவியும், என் ஆண்டவன் முதிர்ந்த வயதுள்ளவருமான பின்பு, எனக்கு இன்பம் உண்டாயிருக்குமோ (ஆதி. 18:12) என்று தனக்குள்ளே சொல்லிக்கொள்ளுகின்றாள். ஆபிரகாம், 'முகங்குப்புற விழுந்து' எல்லாரும் பார்க்கும்படியாக நகைக்கின்றான்; ஆனால், சாராளோ, கூடாரத்திற்குள்ளே இருந்தவளாய், தனது மனதிற்குள்ளேயே நகைத்துக்கொண்டிருக்கிறாள். ஆபிரகாமினிடத்தில் காணப்பட்ட அதே எண்ணமே சராராளினிடத்திலும் காணப்பட்டது; 'என் ஆண்டவன் முதிர்ந்த வயதுள்ளவர், நான் கிழவியாயிருக்கிறேன்' என்றே நினைத்து நகைத்தாள் சாராள்.

இதைக் கண்ட கர்த்தர் ஆபிரகாமை நோக்கி, 'சாராள் நகைத்து, நான் கிழவியாயிருக்கப் பிள்ளைபெறுவது மெய்யோ என்று சொல்வானேன்? **கர்த்தரால் ஆகாத காரியம் உண்டோ?** உற்பவகாலத்திட்டத்தில் உன்னிடத்திற்குத் திரும்ப வருவேன். அப்பொழுது சாராளுக்கு ஒரு குமாரன் இருப்பான்' (ஆதி. 18:13,14) என்று மீண்டும் உறுதிபடக் கூறுகின்றார். இதைக் கேட்டதும் சாராள் பயந்து, நான் நகைக்கவில்லை என்று மறுத்தாள். அதற்கு அவர்: இல்லை, நீ நகைத்தாய் என்றார் (ஆதி. 18:15). சாராளே, நீ உன்னுடைய உடலின் பெலத்தை மாத்திரமே பார்த்துக்கொண்டிருக்கின்றாய்? உனது புருஷனின் சீரர பெலம் அற்றுப்போனது என்று நினைத்துக்கொண்டிருக்கின்றாய்? சூழ்நிலைகளை மாத்திரமே நீ பார்த்துக்கொண்டிருக்கின்றாய்? இவைகள் எல்லாவற்றிற்கும் மேலாக கிரியை செய்கிற தேவன் நான்; என்னுடைய வல்லமையைக் காண நீ மறந்துவிட்டாய்? என்னுடைய வலிமையின் மீது சந்தேகம் கொள்ளுகின்றாய்? என்பதை தேவன் சாராளுக்கு ஞாபகப்படுத்துகின்றார். வாக்குத்தத்தின்மேலும்,

வாக்குத்தத்தத்தைக் கொடுத்தவர் மேலும், அவரது வல்லமையின் மேலும் நம்பிக்கையில்லாமல் சந்தேகப்பட்டுக்கொண்டிருப்பதினாலேயே சாராள் நகைத்துக்கொண்டிருந்தாள். தேவன் கொடுத்த வாக்குத்தத்தங்களின் மேல் விசுவாசமற்றவர்களாக, அவைகளைக் குறித்து நாம் சந்தேகப்படும்போது, **நமது விசுவாசத்தைத் தூண்டிவிடும்படியாக**, **தேவன் நம்மை உணர்த்துவிக்கின்றார்** என்பதை நாம் அறிந்துகொள்ளவேண்டியது அவசியம்.

எபிரெய ஆக்கியோன், சாராளைக் குறித்து, விசுவாசத்தினாலே சாராளும் **வாக்குத்தத்தம்பண்ணினவர் உண்மையுள்ளவரென்றெண்ணி**, கர்ப்பந்தரிக்கப் பெலனடைந்து, வயதுசென்றவளாயிருந்தும் பிள்ளைபெற்றாள் (எபி. 11:11) என்று எழுதுகின்றார். வாழ்க்கையின் கடைசி நேரத்தில், எல்லாம் முடிந்துபோயிற்று என்று எண்ணும் வேளையில், சரீரங்கள் பெலனற்று இருந்த நாட்களில், முழு நம்பிக்கையும் அற்றுப்போயிருந்த காலத்தில், விசுவாசிக்கிறதற்குக்கூட ஏதுவான காரியங்கள் எதுவும் தென்படாத சூழ்நிலையில், சாராளின் தவற்றை தேவன் சுட்டிக்காட்டினபோது, சாராளின் விசுவாசம் உயிர்பெற்று எழுந்து, அவர்களது சரீரங்களில் கிரியைசெய்து. **"வாக்குத்தத்தம்பண்ணினவர் உண்மையுள்ளவர்"** என்ற நம்பிக்கையை அவர்களில் வேரூன்றச் செய்து, வயதான நாட்களிலும் சாராளைக் கர்ப்பந்தரிக்கச் செய்தது. சாராளுக்குள் விசுவாசம் வளரத் தொடங்கினபோது, தன்னோடு பேசிக்கொண்டிருக்கின்ற தேவன் உண்மையுள்ளவர், தான் சொன்னதை செய்து முடிக்கின்றவர் என்பதை முழு நிச்சயமாய் அவள் நம்பினவளாகவும், புரிந்துகொண்டவளாகவும், அதனை ஒவ்வொரு நாளும் வாழ்க்கையில் அறிக்கை செய்து அறிக்கை செய்து விசுவாசத்தில் அவள் பெலனடைகிறவளாகவும் காணப்பட்டாள்.

நம்முடைய வாழ்க்கையிலும், எல்லாம் முடிந்துபோயிற்று என்று நாம் நினைக்கும்போது, தேவனது தொடுதல் நம்முடைய வாழ்க்கையில் விசுவாசத்தை வளரச்செய்து, நம்முடைய வாழ்க்கையின் காரியங்களை செய்துமுடிக்கப் போதுமானது. எனவே, கடுகுவிதையளவு விசுவாசம் உங்களுக்கு இருந்தால் நீங்கள் இந்த மலையைப் பார்த்து, இவ்விடம் விட்டு அப்புறம்போ என்று சொல்ல அது அப்புறம் போம்; உங்களால் கூடாத காரியம் ஒன்றுமிராது என்று, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் (மத். 17:20) என்றார் இயேசு கிறிஸ்து. **"தேவன் உண்மையுள்ளவர்"** என்பதை நாம் முழு நிச்சயமாய் விசுவாசிப்போமென்றால், நம்புவோமென்றால், அதையே வாழ்க்கையில் பற்றிக்கொள்ளுவோமென்றால், நம்முடைய விசுவாசத்தின் ஆணிவேரை உறுதியாக்க அது போதுமானது.

மற்றொரு சம்பவத்தையும் வேதத்தில் நாம் வாசிக்க முடியும். சகரியா தேவனுக்கு ஊழியம் செய்த ஓர் ஆசாரியன், தனக்கு ஒரு குழந்தை வேண்டும் என்று அவன் தேவ சமுகத்தில் ஜெபிக்கிறவனாகவும் காணப்பட்டான். ஒருநாள், அவன் தேவாலயத்துக்குள் பிரவேசித்துத் தூபங்காட்டுகிற வேளையிலே ஜனங்களெல்லாரும் கூட்டமாய் வெளியே ஜெபம் பண்ணிக்கொண்டிருந்தபோது, கர்த்தருடைய தூதன் ஒருவன் தூபபீடத்தின் வலதுபக்கத்திலே நின்று அவனுக்குத் தரிசனமாகி, சகரியாவே, பயப்படாதே, உன் வேண்டுதல் கேட்கப்பட்டது; உன் மனைவியாகிய எலிசபெத்து உனக்கு ஒரு குமாரனைப் பெறுவாள், அவனுக்கு யோவான் என்று பேரிடுவாயாக (லூக். 1:10,11,13) என்று கூறுகின்றான். ஆபிரகாமுக்கும் சாராளுக்கும் 'ஈசாக்கு' என்ற பெயரை முன்னமே கர்த்தர் கொடுத்ததைப் போல, சகரியாவுக்கும் எலிசபெத்துவுக்கும் பிறக்கவிருக்கும் குழந்தைக்கு 'யோவான்' என்ற பெயரை முன்னமே கொடுக்கின்றார் கர்த்தர். என்றபோதிலும், சகரியா தேவதூதனை நோக்கி, இதை நான் எதினால் அறிவேன்; நான் கிழவனாயிருக்கிறேன், என் மனைவியும் வயதுசென்றவளாயிருக்கிறாளே (லூக். 1:18) என்று சொல்லுகின்றான். ஆபிரகாமும் சாராளும் சொன்னதைப் போன்ற வார்த்தைகளையே சகரியாவும் தேவதூதனிடத்தில் சொல்லுகின்றான்; இந்த இரண்டு குடும்பத்தினரின் நிலையும் ஒன்றாகவே காட்சியளித்தது. சாராள் நகைத்தபோது, **"இல்லை நகைத்தாய்" என்று அவளது தவற்றை மாத்திரமே தேவன் சுட்டிக்காட்டினார்**; ஆனால், சகரியாவினிடத்திலோ, 'நான் தேவசந்நிதானத்தில் நிற்கிற காபிரியேல் என்பவன்; உன்னுடனே பேசவும், உனக்கு இந்த நற்செய்தியை அறிவிக்கவும் அனுப்பப்பட்டு வந்தேன்; இதோ, தகுந்தகாலத்திலே நிறைவேறப்போகிற என் வார்த்தைகளை நீ விசுவாசியாதபடியினால் **இவைகள் சம்பவிக்கும் நாள்மட்டும் நீ பேசக்கூடாமல் ஊமையாயிருப்பாய்"** (லூக். 1:19,20) **என்று கடினமான வார்த்தைகளைச் சொல்லுகின்றான்** தேவதூதன்.

இரண்டு குடும்பங்களின் நிலையும் ஒன்றுதான், இரண்டு குடும்பத்தினர் சொன்ன காரணமும் ஒன்றுதான்; ஆனால், சாராளினிடத்திலோ 'இல்லை நகைத்தாய்' என்று அவள் செய்த தவற்றைச் சுட்டிக்காட்டுகின்றார், சகரியாவினிடத்திலோ 'இவைகள் சம்பவிக்கும் நாள்மட்டும் நீ பேசக்கூடாமல் ஊமையாயிருப்பாய்' என்று கடினமாகச் சொல்லுகின்றார். அவன் வெளியே வந்தபோது அவர்களிடத்தில் பேசக்கூடாமலிருந்தான்; அதினாலே தேவாலயத்தில் ஒரு தரிசனத்தைக் கண்டானென்று அறிந்தார்கள். அவனும் அவர்களுக்குச் சைகை காட்டி ஊமையாயிருந்தான் (லூக். 1:22) என்றே சகரியாவைக் குறித்து வேதம் கூறுகின்றது. சாராளுடைய வாழ்க்கையில், வயதான நாட்களில்

குழந்தை பெற்றவர்களைக் குறித்து அவள் கேள்விப்பட்டதே இல்லை; ஆனால், சகரியாவோ பழைய ஏற்பாட்டுக் காலத்தில் நடைபெற்ற அநேகக் காரியங்களைக் குறித்து அறிந்திருந்தான். ஆபிரகாம் சாராள் என்பவர்களின் வாழ்க்கையில் கர்த்தர் செய்தவைகளையும், ஈசாக்கு ரெபெக்காள் குடும்பத்தின் காரியங்களைக் குறித்தும், மனோவாவின் குடும்பத்தில் கர்த்தர் செய்த காரியங்களையும் ஆசாரியனாகிய சகரியா நன்றாகவே அறிந்திருந்திருப்பான்; அவன் ஆசாரியனாயிருந்தபடியினால் ஜனங்களுக்கும் அவைகளை அறிவித்திருப்பான், நாமும் ஆபிரகாமின் சந்ததியாரே என்றும் ஜனங்களுக்குப் போதித்திருப்பான், எகிப்து தேசத்திலிருந்து இஸ்ரவேல் மக்களை விடுவித்து அழைத்துவரும்போது தேவன் செய்த அற்புதமான பெரிய பெரிய காரியங்களைக் குறித்து ஜனங்களுக்கு விவரித்திருப்பான்; ஆனால், **அவைகள் அனைத்தும் சகரியாவின் அறிவில் மாத்திரமே காணப்பட்டன, வாழ்க்கையின் அனுபவமாக அவனுக்கு மாறவில்லை**, இன்றும் இது சாத்தியம் என்று அவனது இருதயத்தில் இடம்பெற்றிருக்கவில்லை. ஜனங்களுக்காக தேவசமுகத்தில் சென்று விண்ணப்பஞ் செய்கிறவனாக சகரியா காணப்பட்டான்; ஆனால், தன்னுடைய விண்ணப்பத்திற்குப் பதில் கிடைக்கும் என்ற விசுவாசமோ அவனிடத்தில் இல்லாதிருந்தது.

அநேக நேரங்களில், மற்றவர்களைக் காட்டிலும் தேவன் ஏன் என்னிடத்தில் இத்தனை கடினமாக நடந்துகொள்ளுகின்றார்? என்னை ஏன் இத்தனை அதிகமாகச் சிட்சிக்கின்றார் என்று நாம் நினைக்கக்கூடும்; பெரிய பெரிய தவறுகளைச் செய்தவர்களிடத்தில்கூட மென்மையாக இடைபடும் தேவன், சிறியதோர் தவற்றைச் செய்துவிட்டாலே என்னை ஏன் அதிகமாகக் கடிந்துகொள்ளுகின்றார் என்று நாம் எண்ணக்கூடும்; நான் அத்தனையாய் விழுந்துபோகாதவனாயிருந்தபோதிலும், என்னை ஏன் தண்டிக்கின்றார் என்று சிந்திக்கக்கூடும்; என்றபோதிலும், அது நமது விசுவாசத்தை வர்த்திக்கப்பண்ணவும், வளர்ச்சிக்காகவுமே என்பதை நாம் அறிந்துகொள்ளவேண்டியது அவசியம். தேவனோடு நடக்கிறவர்களாக மாத்திரம் நாம் காணப்படாமல், அவர் மேல் நாம் வைத்திருக்கும் விசுவாசத்திலும் ஒவ்வொரு நாளும் வளர்ச்சியடைகிறவர்களாகவும் நாம் காணப்படவேண்டும். அன்பிலே நாம் வளர்ச்சியடையவேண்டும், அவர் விரும்பும் பரிசுத்தத்திலே நாம் வளர்ச்சியடையவேண்டும், மற்றவர்களோடு உள்ள உறவிலே நாம் வளர்ச்சியடையவேண்டும், தேவனுடைய எதிர்பார்ப்பினை ஒவ்வொரு நாளும் நம்முடைய வாழ்க்கை நிறைவேற்றவேண்டும்.

தன் எஜமானுடைய சித்தத்தை அறிந்தும் ஆயத்தமாயிராமலும், அவனுடைய சித்தத்தின்படி செய்யாமலும் இருந்த ஊழியக்காரன் அநேக அடிகள் அடிக்கப்படுவான். அறியாதவனாயிருந்து, அடிகளுக்கு ஏதுவானவைகளைச் செய்தவனோ, சில அடிகள் அடிக்கப்படுவான். எவனிடத்தில் அதிகங் கொடுக்கப்படுகிறதோ அவனிடத்தில் அதிகங் கேட்கப்படும்; மனுஷர் எவனிடத்தில் அதிகமாய் ஒப்புவிக்கிறார்களோ அவனிடத்தில் அதிகமாய்க் கேட்பார்கள் (லூக்.12:47,48) என்பதுதானே இயேசு கிறிஸ்துவின் போதனை. மேற்கண்ட இரண்டு குடும்பத்தினரின் வாழ்க்கையில், இந்த வசனங்கள் சரியாகப் பொருந்துவதை நாம் அறிந்துகொள்ள முடியும். சாராளுக்கு அப்படிப்பட்ட அனுபவத்தைக் குறித்து கேள்விப்பட வாய்ப்பு கிடைக்கவில்லை; ஆனால், ஆசாரியனாகிய சகரியாவோ, அப்படிப்பட்ட அநேகக் காரியங்களைக் குறித்து அதிகம் கேள்விப்பட்டவனாயிருந்தான்; எனவே, தேவன் சகரியாவினிடத்தில் அதிகம் எதிர்பார்த்தார். என்றாலும், உனக்குச் சந்தோஷமும் மகிழ்ச்சியும் உண்டாகும், அவன் பிறப்பினிமித்தம் அநேகர் சந்தோஷப்படுவார்கள். அவன் கர்த்தருக்கு முன்பாகப் பெரியவனாயிருப்பான், திராட்சரசமும் மதுவும் குடியான், தன் தாயின் வயிற்றிலிருக்கும்போதே பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டிருப்பான். அவன் இஸ்ரவேல் சந்ததியாரில் அநேகரை அவர்கள் தேவனாகிய கர்த்தரிடத்திற்குத் திருப்புவான். பிதாக்களுடைய இருதயங்களைப் பிள்ளைகளிடத்திற்கும், கீழ்ப்படியாதவர்களை நீதிமான்களுடைய ஞானத்திற்கும் திருப்பி, உத்தமமான ஜனத்தைக் கர்த்தருக்கு ஆயத்தப்படுத்தும்படியாக, அவன் எலியாவின் ஆவியும் பலமும் உடையவனாய் அவருக்கு முன்னே நடப்பான் (லூக். 1:14–17) என்று **சகரியாவுக்குக் கொடுத்த வாக்குத்தத்தத்திலிருந்து கொஞ்சம்கூட தேவன் பின்வாங்கவில்லை**; ஆனால், சிட்சிப்பதிலே சகரியாவினிடத்தில் சற்று கடினமாக நடந்துகொண்டார்.

நாம் அதிகம் அறிந்திருப்பதினாலேயே, தேவன் நம்மிடத்தில் அதிகம் எதிர்பார்க்கின்றார், **நாம் அதிகம் அறிந்திருப்பதினாலேயே தேவன் நம்மை அதிகம் சிட்சிக்கின்றார்; என்றபோதிலும், நம்முடைய வாழ்க்கையில் அவர் கொடுத்த வாக்குத்தத்தங்கள் நிறைவேறுவது நிச்சயம். அவருடைய வார்த்தைகளில் ஒன்றும் தரையிலே விழுந்துபோவதில்லை.** 'வாக்குத்தத்தம்பண்ணினவர் உண்மையுள்ளவர்' என்பதை சாராளுக்கு உணர்த்துவித்து, அவளது உள்ளத்தில் விசுவாசத்தினை தேவன் வளரச்செய்ததுபோல, நம்முடைய வாழ்க்கையிலும் விசுவாசத்தை வளரச்செய்ய அவர் போதுமானவர். ஆபிரகாமின் குடும்பத்தில் தனது வாக்குத்தத்தத்தை நிறைவேற்றிய தேவன் நம்முடைய வாழ்க்கையிலும் தனது வாக்குத்தத்தத்தை நிறைவேற்றப் போதுமானவர்.



# பணித்தளச் செய்திகள்

## மகய் 2 கோட்டம்

### ஏப்ரல் 01 — பாராசட்டி

புதிய கிராமங்களான மாத்ராபூர், அமாவதாரி ஆகிய இடங்களில் முதன் முதலாக சுவிசேஷம் அறிவிக்கப்பட்டது. ஹரியார்பூர், கோபரி, சிவ்கஞ்ச் மற்றும் ஜஹாஜ்வா ஆகிய கிராமங்களில் சுவிஷேக் கைப்பிரதிகளின் வாயிலாக சுவிசேஷம் கடந்து சென்றது. கஜ்ராகர் மற்றும் மாயாபூரில் நடத்தப்பட்ட உபவாசக் கூட்டங்களில் 30 பேர் கலந்து கொண்டனர். பல நாட்களாக நோய்வாய்ப்பட்டிருந்த சிவ்கஞ்ச் கிராமத்தைச் சேர்ந்த பேபிதேவி, கஜ்ராகர் கிராமவாசி பலோன் மண்டல், கோவாரி கிராமத்தைச் சேர்ந்த ஆராதனா குமாரி ஆகியோர் விசுவாசமுள்ள ஜெபத்தால் சுகமானார்கள். விபத்தில் சிக்கி மருத்துவ சிகிச்சைப் பெற்றுவருகிற ஜெய்கிர் கிராமத்தைச் சேர்ந்த கிருஷ்ண தாஸ், பசந்திதேவி ஆகியோரின் சுகத்திற்காகவும் ஜெபியுங்கள்.

### ஏப்ரல் 02 — ஹஸ்புரா

புதிய கிராமங்களான மோகன்பூர், லகாய்பூர் பகுதிகளில் செய்யப்பட்ட தனித்தாள் ஊழியத்தின் வாயிலாக சுனில் குமார், ஆஷாதேவி, ராகேஷ் யாதவ், மனிஷா தேவி, ஷிவ்முனி சௌத்ரி, மகேஷ் சௌத்ரி, சீமாதேவி, முசைலா ஆகியோர் சந்திக்கப்பட்டனர். காரு, அமர்பூர், பஹர்பூர் ஆகிய கிராமங்களில் சிறுவர்கள் மத்தியில் மாலைநேர வகுப்புகள் நடத்தப்படுகிறது. சோட்டு பாண்டே, முகேஷ் பாண்டே, மங்கல் பாரதி, சுரேஷ் பாரதி, பிரேந்திர பாரதி, ரஞ்சுதேவி, முன்னிதேவி, தர்மேந்திர யாதவ் ஆகிய 15 பேர் விசுவாசத்தில் வந்துள்ளனர். சுனிதாவின் மகளுக்கு ஏற்ற வாழ்க்கைத்துணை கிடைக்கவும், ரவி ஜிதேந்திர யாதவ், ரஞ்சுதேவி இருவரின் சுகத்திற்காகவும், ஜெபியுங்கள்.

## ஏப்ரல் 03 நவாதா

புதிதாக சுவிசேஷத்திற்கு வழி திறக்கப்பட்ட ஷிவ்நகர், கோனாவா ஆகிய கிராமங்களில் முதன் முதலாக சுவிசேஷம் அறிவிக்கப்பட்டது. அதௌவா, ஆந்தி, திபுரா, சோன்சிஹாரி, நானூரா, ஆஷாதி, ஜூனாதி, டெதௌர், நானூரா ஜெயில் ரோடு, நவாதாநகர் ஆகிய இடங்களில் சுவிசேஷத்திற்கு ஆர்வம் காட்டியவர்கள் மத்தியில் புதிய ஏற்பாடுகள் விநியோகிக்கப்பட்டன. பரத்புரா கிராமத்தைச் சேர்ந்த பிந்துமாஞ்சி, மனநல பாதிப்பிலிருந்து சுகமாகவும், திருமணமாகி *10* ஆண்டுகளாக குழந்தைப் பாக்கியம் இல்லாதிருக்கிற ராஜு பண்டிட், நீத்துதேவி தம்பதிக்காகவும் ஜெபியுங்கள்.

## ஏப்ரல் 04 செவோா

தனித்தாள் ஊழியத்தின் வாயிலாக 20 பேருக்கு புதிய ஏற்பாடுகள் விநியோகிக்கப்பட்டன. கேம்ரா, பேல்குன்டி, எக்ரமா, ஏக்தா ஆகிய 4 கிராமங்களில் உபவாச ஜெபம் நடத்தப்பட்டது. செங்கல் சூளையில் வேலை செய்துவருகிற ரீட்டாதேவி பிரசவ நேரத்தில் ஆபத்தான நிலையில் இருந்தபோது ஏறெடுக்கப்பட்ட ஜெபத்தைக்கேட்ட தேவன் சுகப்பிரசவத்தைக் கொடுத்தார். மூளையில் கட்டியுடன் கஷ்டப்படுகிற முகேஷ் சுகமடைய, திருமணமாகி பல வருடங்களாக குழந்தைப்பாக்கியம் இல்லாதிருந்து கர்ப்பமாக இருக்கிற சுசீலாதேவியின் சுகப்பிரசவத்திற்காகவும், அடிக்கடி வியாதிப்படுகிற இப்பணித்தள ஊழியருடைய மனைவி பூரண குணமடையவும் ஜெபியுங்கள்.

## ஏப்ரல் 05 மௌ

ரீட்டாதேவி, கபில் யாதவ், மோஹித் குமார், நீட்டுதேவி, பிரமோத் ரவிதாஸ், குடியாதேவி ஆகியோருக்கு சுவிசேஷம் அறிவிக்கப்பட்டது. சபையாரின் ஜெபத்தைக் கேட்ட தேவன் சுனில் ரவிதாஸின் குழந்தையின் வியாதியை சுகமாக்கினார். சபை விசுவாசி அரவிந்த் கர்த்தருக்குள் நித்திரையடைந்த நிலையில் அவரது மனைவி சுனிதாதேவி, இரண்டு பிள்ளைகளின் வாழ்க்கையில் தேவன் ஆறுதல்படுத்தி உடனிருந்து வழிநடத்தவும், நீட்டுதேவிக்கு தேவன் குழந்தைப் பாக்கியத்தைக் கொடுக்கவும், மனச்சோர்வோடு *10* வருடங்களாக முடங்கிக் கிடக்கும் பிரமோத் ரவிதாஸின் விடுதலைக்காகவும் ஜெபியுங்கள்.

## ஏப்ரல் 06 குராரு

தொடர் ஊழியத்தின் வாயிலாக அனிஷ்குமார் கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டார். ராஜாராம்சௌவுக் பகுதியில் நடத்தப்பட்டக் ஜெபக் கூட்டத்தில் அநேகர் உற்சாகமாகக் கலந்து கொண்டனர். மூலவியாதியினால் பாதிக்கப்பட்ட சுரேஷ், சீரர பெலவீனத்தோடு இருந்த பிங்கிதேவி, சோன்வாதேவி

ஆகியோருக்கு தேவன் சுகத்தைக் கொடுத்தார். பிசாசின் கிரியையினால் பாதிக்கப்பட்டுள்ள பூஜா விடுதலையாகவும், ஃபதேபூர் பகுதியில் ஊழியத்திற்கு எதிராக செயல்படுகிற எதிர்ப்பாளர்களின் மனமாற்றத்திற்காகவும், ரேணு குமாரி மற்றும் கரினா குமாரி ஆகியோருக்கு ஏற்ற வாழ்க்கைத் துணை கிடைக்கவும், வலிப்பு நோயினால் பாதிக்கப்பட்டுளள தீப்சந்த், சவிதாவின் அற்புத சுகத்திற்காகவும் ஜெபியுங்கள்.

### ஏப்ரல் 07 ஜமுவா

11 இடங்களில் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டு பின்தொடர் ஊழியம் செய்யப்பட்டது. சரீர பெலவீனத்தோடு இருந்த வீணா விசுவாசமுள்ள ஜெபத்தால் சுகமாகி சுகம்கொடுத்த தேவனை ஆராதிக்க ஆலயத்திற்கு வருகிறார். பணித்தளத்தைச் சுற்றியுள்ள கிராமங்களில் காணப்படும் மூடப்பழக்க வழக்கங்கள் மாறவும், வாழ்க்கையை சீரழித்துக்கொண்டிருக்கும் வாலிபப் பிள்ளைகள் மத்தியில் தேவன் கிரியை செய்யவும், புதிய இடங்களில் சுவிசேஷத்திற்கு வழி திறக்கப்படவும், ஹரிலால், திலீப் ராமின் அற்புத சுகத்திற்காகவும் ஜெபியுங்கள்.

### ஏப்ரல் 08 பக்ரிபிரபாவ்

சுமார் 200 பேருக்கு சுவிசேஷக் கைப்பிரதிகள் வாயிலாக சுவிசேஷம் கடந்துசென்றது. சிந்தாதேவி, கௌரிதேவி மற்றும் பரையா பீஹாவைச் சேர்ந்த லவ்லி குமாரி, போகசி கிராமத்தைச் சேர்ந்த விகாஸ் குமாரி ஆகியோர் புதிதாக சபைக்கு வருகிறார்கள். தன்புரா மற்றும் டட்ரால் கிராமத்தில் சிறுவர்கள் மத்தியில் ஊழியம் செய்யப்பட்டது. இருதய அறுவை சிகிச்சை செய்துள்ள சரிதாதேவியின் சுகத்திற்காகவும், குஷ்பு குமாரி, பிரியங்கா பிசாசு பிடியிலிருந்து விடுதலையாகவும், வாய் பேசாமல் ஊமையாக இருக்கிற முகுந்தேவியின் பேரன் வாய்பேசவும் மற்றும் இடுப்பில் ஏற்பட்டுள்ள நரம்புப் பிரச்சினையால் தொடர்ந்து கால் வலியால் வேதனைப்படுகிற இப்பணித்தள ஊழியருடைய மனைவி பிரபாவதியின் சுகத்திற்காகவும் ஜெபியுங்கள்.

### ஏப்ரல் 09 கோடர்மா

விசுவாசிகளின் வீடுகளில் ஜெபக் கூடுகை நடத்தப்பட்டது. சங்கீதா வீட்டில் நடந்த உபவாசக் கூட்டத்தில் 30 பேர் பங்கேற்றனர். ஞாயிறு வகுப்பில் சிறுவர்கள் உற்சாகமாகக் கலந்துகொண்டனர். சாந்தி அமித் சுகப்பிரசவத்தில் பெண் குழந்தையைப் பெற்றெடுக்க தேவன் கிருபை செய்தார். பபிதாவின் கணவர் குடிப்பழக்கம் மற்றும் தவறான தொடர்பிலிருந்து மனந்திரும்பவும், திருமணமாகி பல வருடங்களாக குழந்தைப் பாக்கியம் இல்லாதிருக்கிற பார்வதி, அனிதாவின் கர்ப்பத்தை தேவன் ஆசீர்வதிக்கவும், மூளையில் காணப்பட்ட பிரச்சினையினால் தனது 2 சகோதரர்கள் இறந்த நிலையில் அதே வியாதியினால் பாதிக்கப்பட்டுள்ள மோனாவின் அற்புத சுகத்திற்காகவும் ஜெபியுங்கள்.

### ஏப்ரல் 10 மான்பூர்

அவர்கள் மத்தியில் சுவிசேஷக் கைப்பிரதிகள், புதிய ஏற்பாடு விநியோகிக்கப்பட்டன. இப்பணித்தள சபையில் திருமுழுக்குப்பெற ஆயத்தமாக இருந்தவர்களில் 12 பேர் தேவனுடைய திருவசனத்திற்குக் கீழ்ப்படிந்து திருமுழுக்குப் பெற்றார்கள். மாலாடோலியில் வசிக்கும் மோகன் கேவட் ஊழியத்திற்கு எதிர்ப்பு தெரிவித்தநிலையில் அவரது மனைவி மற்றும் பிள்ளைகள் ரகசியமாக தேவாலயத்திற்கு வந்து ஜெபித்த ஜெபத்தைக்கேட்ட தேவன் தடையை நீக்கினார். ஈஷா குமாரி, பிரகாஷ் குமார், சாஹர் குமார் ஆகியோருக்கு தேவன் சரியான வாழ்க்கைத் துணையை ஏற்படுத்தித் தர ஜெபியுங்கள்.

## மைத்திலி I கோட்டம்

### ஏப்ரல் 11 பாபுபர்ஹி

பரமேஷ்வர் ஷர்மா, ராதேலால், விஜய், ராஜ்குமார், லஷ்மி மண்டல் ஆகியோரது வீடுகளில் வீட்டுசபை ஆராதனை நடத்தப்பட்டது. இக்கூடுகையில் கலந்துகொண்டு அற்புத சுகத்தைப்பெற்றவர்களின் சாட்சியைக் கேட்டு கிறிஸ்துவை அறியாத அநேகர் புதிதாக ஜெபக் கூடுகைக்கு வருகிறார்கள். அசுத்த ஆவியின் கிரியையினால் பாதிக்கப்பட்டிருந்த ஃபேகு சர்மா குடும்பத்தினர் அடிக்கடி உடல்நிலை பாதிக்கப்பட்ட நிலையில் இயேசுவின் நாமத்தில் அவர்களுக்காக ஜெபித்தபோது தேவன் விடுதலையைக் கொடுத்தார். நித்தமும் சரீர வேதனையால் கஷ்டப்பட்ட நின்சப்குமார் மனைவி பபிதாதேவி, இப்பணித்தள ஊழியருடைய மனைவி அம்பிகா ஜெபத்தின் உதவியால் உடல்நிலை பாதிப்பிலிருந்து சுகமானார். ஊழியத்திற்கு விரோதமாக செயல்படும் மதவாத அமைப்பினர் மனந்திரும்பவும், சிறுவர்கள் மத்தியில் நடத்தப்படவிருக்கிற விடுமுறை வேதாகம வகுப்புகளுக்காகவும் ஜெபியுங்கள்.

### ஏப்ரல் 12 பாசோபட்டி

மதியானி மதுபனி கிராமத்தைச் சேர்ந்த சந்தன் சாஹ், பங்கஜ்குமார் சாஹ், பிரேந்திர சாஹ் ஆகியோரது குடும்பத்தினருக்கு சுவிசேஷம் அறிவித்து ஜெபிக்கப்பட்டது. கோட்பாகி கிராமத்தைச் சேர்ந்த சத்யம் பாஸ்வான் குடும்பத்தில் காணப்பட்ட அசுத்த ஆவியின் ஆதிக்கத்தால் அனைவரும் வியாதிப்பட்டனர். இவர்களுக்கு சத்தியத்தை அறிவித்து ஜெபித்தபோது தேவன் விடுதலையைக் கொடுத்தார். இக்குடும்பத்தினர் அனைவரும் சபை ஆராதனையில் கலந்துகொள்கிறார்கள். 3 இடங்களில் வீட்டுசபை ஆராதனை நடத்தப்படுகிறது. ஞாயிறு ஆராதனைக்கு சுமார் 70 பேர் வருகின்றனர். கர்த்தருடைய திருவசனத்திற்குக் கீழ்ப்படிந்து 2

புதிய விசுவாசிகள் திருமுழுக்குப் பெற்றனர். சுகவீனப்பட்டு மருத்துவர்களால் கைவிடப்பட்ட ராம் ஸ்நேஹ்தேவி சபையாரின் தொடர் ஜெபத்தால் தேவனால் மீட்கப்பட்டார். இப்பணித்தள சபையின் ஆராதனைக்கு எதிராகவும், வளாகத்தை அசுத்தப்படுத்தியும், குழப்பத்தை ஏற்படுத்துகிற சமூக விரோதிகள் மனந்திரும்பவும், அதோடு சபைக்கட்டிடத்தை சுற்றிலும் சுவர் கட்டப்பட்டு ஆலயம் பாதுகாக்கப்படவும், மனோகர் சாஹ் மற்றும் காமத் சஹனி ஆகியோரின் வேலைவாய்ப்பிற்காகவும், விசுவாசிகளின் பிள்ளைகளின் உயர்படிப்பிற்காகவும் ஜெபியுங்கள்.

## ஏப்ரல் 13 ஜெய்நகர்

பாபுபரஹி, கட்டையா, மஹ்தெளர், கட்வாஹி, ஃபர்தாஹி, ஜோகியா, காடா, சோனார் டோலி, சத்தெளனி உஸ்ராஹி, பரஹி, நரார், துலிபட்டி ஆகிய 12 கிராமங்களில் சுமார் 200 சுவிசேஷக் கைப்பிரதிகளின் விநியோகித்து சுவிசேஷம் அறிவிக்கப்பட்டு ஆர்வமுள்ளவர்கள் மத்தியில் பின்தொடர் ஊழியம் செய்யப்பட்டது. வீடுசந்திப்பு ஊழியத்தின் வாயிலாக விசுவாசிகளின் குடும்பங்கள் சந்திக்கப்பட்டன. வாலிபர்களுக்காக நடத்தப்பட்ட சிறப்புக் கூடுகையில் 130 வாலிபர்கள் கலந்து கொண்டனர். மரார் பகுதியில் வீட்டுசபை ஆராதனை நடத்தப்பட்டன. 45 பேர் கலந்து கொண்டனர். திருமுழுக்குப்பெற ஆயத்தமாக இருக்கிற 10 புதிய விசுவாசிகளுக்காகவும், பிரபா குமாரி அசுத்த ஆவியின் கிரியையிலிருந்து விடுதலையாகவும், போதைப் பழக்கத்திற்கு அடிமைப்பட்டுள்ள உத்கார் சதாய் விடுவிக்கப்படவும், பபித்தா, ரூபிதேவியின் சரீர ஆரோக்கியத்திற்காகவும், பெரும் கடன் பிரச்சினையில் சிக்கியுள்ள அசோக் சாஹ் வாழ்க்கையில் தேவன் உதவி செய்யவும் ஜெபியுங்கள்.

## ஏப்ரல் 14 ஜன்ஜார்பூர்

சுவிசேஷம் அறிவிக்கப்பட்ட மஹ்ரைல், உஜான், சூகேத், சிமைஸிபூர், பெஹட், சனௌராகஞ்ச் ஆகிய கிராமங்களில் பின்தொடர் ஊழியம் செய்யப்பட்டது. பேந்தா பகுதியில் பகவத் மண்டல், ராஜ்குமார் மண்டல், மீராதேவி, ஆஷ ாதேவி, குலாப்தேவி, சோனிதேவி ஆகியோரது குடும்பத்தினருக்கு சுவிசேஷம் அறிவிக்கப்பட்டது. ரோஷன்குமார் சௌபால், பசந்திதேவி, கணேஷ் சௌபால், சஞ்சய்சௌபால், பார்வதிதேவி, வினய்சௌபால் ஆகியோருக்கு தனித்தாள் ஊழியம் செய்யப்பட்டது. அமலா, குந்தி ஆகியோரது வீடுகளில் வீட்டுசபை ஆராதனை நடத்தப்பட்டது. வயிற்றில் குழந்தை இறந்துவிட்டதால் ஆபத்தான நிலையிலிருந்த தாயான பூலோவை தேவன் பாதுகாத்தார். சோனிதேவிக்கு சாத்தான் தொல்லையினால் ஏற்படும் போராட்டம் நீங்கவும், சரீரம் மற்றும் மனவேதனையால் சோர்ந்திருக்கும் பூலோவின் ஆறுதலுக்காகவும், கல்லீரல் பாதிப்பினால் பாதிக்கப்பட்டுள்ள சுசீலாதேவின் சுகத்திற்காகவும், தேர்வு

எழுதியுள்ள இப்பணித்தள ஊழியருடைய பிள்ளைகள் தேர்வில் தேர்ச்சிப்பெறவும் ஜெபியுங்கள்.

### ⋙ ஏப்ரல் 15 கியோட்டி

தடிமா, கம்தௌல், கமல்பூர், சக்கா, நூர்சௌவுக், ரன்வே ஆகிய இடங்களில் சுவிசேஷத்திற்கு செவிசாய்த்தவர்கள் மத்தியில் தொடர் ஊழியம் செய்யப்படுகிறது. விசுவாசிகளின் குடும்பங்களில் வேதாகம ஆராய்ச்சி நடத்தப்படுகிறது. சஞ்சய் பாஸ்வான், ஆஷா, பப்லு பாஸ்வான, ஜூன்மா ஆகியோரது வீடுகளில் வீட்டுசபை நடத்தப்படுகிறது. இரண்டு இடங்களில் நடத்தப்படுகிற உபவாசக் கூடுகையில் 50 முதல் 60 பேர் கலந்துகொள்கிறார்கள். ஞாயிறு ஆராதனையில் 120 பேரும் மற்றும் திருவிருந்து ஆராதனையில் வீட்டுசபை விசுவாசிகளும் சேர்ந்து 170 பேரும் கலந்து கொண்டனர். ரிங்குதேவி, ஜோதிகுமாரி ஆகியோருக்கு இயேசுவின் நாமத்தில் ஜெபித்தபோது பிசாசின் தொல்லையிலிருந்து விடுதலை கிடைத்தது. பபிதாதேவி செய்துவரும் வியாபாரத்தில் தேவன் ஆசீர்வாதத்தைக் கொடுத்ததோடு ஒரு பேத்தியையும் கொடுத்து ஆசீர்வதித்துள்ளார். சுஜித் குமார், யோகேந்திர யாதவ், அமர்ஜித் குமார், மீனாதேவி ஆகியோருக்கு சீரப்பிரகாரமான பெலவீனங்கள் நீங்கி, மனரீதியான சமாதானம் கிடைக்கவும் ஜெபியுங்கள்.

### ⋙ ஏப்ரல் 16 ஷியோஹர்

சுமௌதி கிராமத்தில் பவன் பாஸ்வான் வீட்டில் நடத்தப்பட்ட ஜெபக் கூடுகையில் 12 பேர் கலந்து கொண்டனர். சூரஜ்ராம் மற்றும் ரஸித்பூர் கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டு, ஆர்வமுள்ளவர்கள் மத்தியில் பின்தொடர் ஊழியம் செய்யப்பட்டது. பூஷன்சதாய் வீட்டில் நடத்தப்பட்ட உபவாசக் கூடுகையில் 10 பேர் கலந்து கொண்டனர். பிசாசின் கிரியையினால் பாதிக்கப்பட்டிருந்த சுனைனாதேவி இயேசுவின் நாமத்தில் ஜெபித்தபோது விடுதலையானார், நெஞ்சு வலியால் பாதிக்கப்பட்ட சரவன் ராம், மூல வியாதியினால் பாதிக்கப்பட்டிருந்த ராஜாராம் சதாய் சுகத்திற்காக சபைக்குவந்து ஜெபித்தபோது சுகத்தைப் பெற்றார்கள். சொந்தமாக சபைக்கட்டிடம் கட்டுவதற்கு தேவையான நிலம் கிடைக்கவும், இப்பணித்தள ஊழியத்தையும் மற்றும் ஊழியக்காரரையும் எதிர்த்துவருகிற மதவாத அமைப்பினர் மனந்திரும்பவும், விசுவாசிகள் மத்தியில் காணப்படும் அச்சம் நீங்கவும் ஜெபியுங்கள்.

### ⋙ ஏப்ரல் 17 புல்பரஸ் கோஹரியா

பலுவா தஷ்சின்டோலா, கட்டிப்பட்டி ஆகிய புதிய கிராமங்களில் முதன் முதலாக சுவிசேஷத்திற்கு வழிதிறக்கப்பட்டு சுவிசேஷக் கைப்பிரதிகளின் வாயிலாக சுவிசேஷம் அறிவிக்கப்பட்டது. மனோஜ் பாஸ்வான், சந்தேஷ்வர் யாதவ் ஆகியோரது வீடுகளில் ஜெபக் கூடுகை நடத்தப்பட்டது. பேந்தா

மற்றும் இன்ரவா கிராமங்களில் வீட்டுசபை ஆராதனை நடத்தப்பட்டன. தொடர்ச்சியாக சளி காய்ச்சலினால் பாதிக்கப்பட்டிருந்த ஹூல்லாஸ்பட்டி கிராமத்தைச் சேர்ந்த ஜீவிச்சியின் 3 வயது மகன் கார்த்திக் ஜெபத்தால் சுகமானான். பிரஹம்பூர் கிராமத்தைச் சேர்ந்த புஷ்பலதா கணவர் கணேஷ் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டதினிமித்தம் தனது வீட்டார் மற்றும் கிராமத்தினர் இவரை ஊரை விட்டு ஒதுக்கி, இவர்கள் தங்கள் பணத்திலே இடம்வாங்கவும் தடைசெய்கிறார்கள். ஹூலாஸ் பாட்டி கிராமத்தைச் சேர்ந்த விசுவாசி ரஜினியின் மகன் தீரஜ் குமாரை 4 மாத இடைவெளியில் 3 முறை நாய் கடித்துள்ளது. இவர்களது உறவினர்கள் இது குலதெய்வத்தின் தண்டனை என்று சொல்லி அவர்கள்மீது வீண்பழி சுமத்தி வருகிற சூழ்நிலை மாறவும் ஜெபியுங்கள்.

## ஏப்ரல் 18 சீஸோ

பரியோல், கோடியா, சைன்பூர் ஆகிய கிராமங்களில் சுவிசேஷ ஊழியம் பூரணமாக நிறைவேறியது. இனுஸ்ராஜ், சந்தோஷ், சுஜித், ஷ்யாம், மகேந்திரன் ஆகியோரது வீடுகளில் நடத்தப்பட்ட ஜெபக் கூடுகையில் கலந்துகொண்ட புறஜாதி மக்களுக்கு சுவிசேஷம் அறிவித்து ஜெபிக்கப்பட்டது. இப்பணித்தள சபை ஞாயிறு ஆராதனையில் சுமார் 110 பேர் வந்து கலந்து கொள்கிறார்கள். இப்பகுதியில் ஒருநாள் எழுப்புதல் கூட்டம் நடத்தப்பட்டது. சபையில் புதிய விசுவாசிகளில் பாஸ்வான், அமர்பாஸ்வான், சந்தோஷ் பஹவான், ராம்தேவ் பாஸ்வான் ஆகியோர் திருமுழுக்குப்பெற்று பரலோகத்தை மகிழப்பண்ணினார்கள். துதௌல் பகுதியில் ரோஷன் மற்றும் மாயா வாழ்க்கையில் காணப்பட்ட பிரச்சினையை நீக்கி சமாதானத்தைக் கொடுத்தார். அடிக்கடி வியாதிப்பட்டு மரணத்தருவாயில் இருந்த ரங்கிலாவின் சிறியமகன் சபையாரின் தொடர் ஜெபத்தால் உயிர்பிழைத்தான். செயின்பூர் கிராமத்தில் ஆராதனை நடத்த இடம் கிடைக்கவும், பரத்சாஹ், விக்ரம்சஹனி, பபிதா, ரிங்கு ஆகியோர் தங்கள் வாழ்க்கையில் அற்புதங்களைக் காணவும் ஜெபியுங்கள்.

## ஏப்ரல் 19 காசிரினி

வீட்டுசபை ஆராதனை நடத்தப்படுகிற மஹேஷ்பட்டி, நனௌரா, அஸ்ராஹா, பாசுதேவ்பூர், சிகனி ஆகிய இடங்களில் பின்தொடர் ஊழியம் தொடர்கிறது. தொடர் ஊழியத்தின் பலனால் மிலன்ராம் மனைவி குடியாதேவி, ரஞ்சித்ராம், இந்திரஜித்ராம், சுரேஷ்ஷர்மா, லீலாதேவி, லாலுயாதவ், அமர்ஜித்குமார் ஆகியோர் கிறிஸ்துவை விசுவாசித்து புதிதாக சபை ஆராதனைக்கு வருகின்றனர். பூலோதேவிக்கு தொண்டையில் ஏற்பட்டிருந்த பிரச்சினை மருத்துவத்தால் சுகம் கிடைக்காமல், ஜெபத்தின் உதவியால் தேவன் சுகம் கொடுத்தார். திருமுழுக்குப்பெற அர்ப்பணித்தவர்கள் தடையின்றி திருமுழுக்குப் பெற்றுக்கொள்ளவும், சபைக்கட்டிடத்தைச் சுற்றிலும் சுவர் கட்டி வளாகம்

பாதுகாக்கப்படவும், நீதாதேவிக்கு கர்ப்பப்பை புற்றுநோய் பாதிப்பிலிருந்தும், லாலுயாதவ்க்கு மூலவியாதிலிருந்து சுகமாகவும், திருமணம் முடிந்து பலவருடங்களாகியும் குழந்தையின்றி இருக்கும் ஆர்த்திதேவிக்கு தேவன் குழந்தைச் செல்வத்தை கொடுத்து ஆசீர்வதிக்கவும், இப்பணித்தளத்தில் விடுமுறை வேதாகமப்பள்ளி தடையின்றி நடத்தப்படவும் ஜெபியுங்கள்.

### ஏப்ரல் 20 வன்வாஸா

பஜார், தாரா மண்டல், ரயில்வே ஸ்டேஷன் ஆகிய இடங்களில் சுவிசேஷக் கைப்பிரதிகள் மற்றும் புதிய ஏற்பாடுகள் விநியோகித்து சுவிசேஷம் அறிவிக்கப்பட்டது. தர்பங்கா, கபீர்சௌவுக், பைரோபட்டி ஆகிய இடங்களில் சிறுவர்கள் மத்தியில் நடத்தப்படுகிற வேதாகம வகுப்புகள் வாயிலாக வசனங்கள் கற்றுக்கொடுக்கப்படுகிறது. வேதாகமக் கல்லூரியில் படிக்கிற மாணவர்களை மேற்பார்வையிட்டு அவர்களுக்கு ஆவிக்குரிய ஆலோசனை கொடுக்கப்படுகிறது. கல்லூரி மாணவர்கள் முதல் செமஸ்டர் தேர்வை நல்லமுறையில் எழுதினார்கள். துதியுங்கள்! கல்லூரி வளாகத்தைச் சுற்றிலும் சுற்றுச்சுவர் கட்டப்பட்டு, வளாகம் பாதுகாக்கப்படவும், கிராமங்களில் வசனத்தைக்கேட்ட ஜனங்கள் உள்ளத்தில் தேவவசனம் கிரியை செய்யவும், அவர்கள் விசுவாசமுடன் சபை ஆராதனையில் கலந்துகொள்ளவும், மாணவர்கள் தங்களை முழுமையாக அர்ப்பணித்து ஆவிக்குரிய வாழ்வில் ஸ்திரப்படவும், மாணவர்களுடைய பெற்றோரின் இரட்சிப்பு மற்றும் இப்பணித்தள ஊழியருடைய திருமணத்திற்காகவும் ஜெபியுங்கள்.

### ஏப்ரல் 21 குட்டௌனா

பரைல், ஜான்ஜ்பட்டி, கலரிபட்டி, ஜோகஹி, பதராஹி, பஹாடிடோலா, அம்பேத்கர்நகர், ராம்டோலா குட்டௌனா ஆகிய கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டு, ஆர்வமுள்ளவர்கள் மத்தியில் பின்தொடர் ஊழியம் செய்யப்படுகிறது. தொடர் ஊழியத்தின் வாயிலாக 2 பேர் முழு வேதாகமத்தை வாங்கிப் படித்துவருகிறார்கள். சபையில் ஒருநாள் சிறப்பு உபவாசக்கூடுகை நடத்தப்பட்டது. இச்சபையைச் சேர்ந்த வாலிப சகோதரி ருக்மனிகுமாரி பட்னா பகுதியில் செயல்பட்டுவரும் வேதாகமப்பள்ளிக்கு அனுப்பப்பட்டுள்ளார். ரீட்டாதேவிக்கு காலில் ஏற்பட்டிருந்த புண் ஜெபத்தினால் குணமானது. திருமுழுக்குப்பெற ஆயத்தமாக இருக்கிற புதிய விசுவாசிகளுக்காகவும், விசுவாசிகளின் குடும்பங்களில் காணப்படும் ஏழ்மைநிலை மாறவும், பொதுத் தேர்வு எழுதியுள்ள இவர்களுடைய பிள்ளைகளின் தேர்ச்சிக்காகவும், சபை கட்டிடத்தைச் சுற்றிலும் மதில் கட்டப்படவும், மின்இணைப்பு கிடைக்கவும் ஜெபியுங்கள்.

### ஏப்ரல் 22 பெனிபூர்

ஜெயந்திபூர், பலியாசௌவுக், ஹர்சிங்காபூர், நவாநகர், பிப்ரா, கட்வாஸா,

கர்ஹரி, பல்ஹா, ஹேரூக், டக்ராம், பௌஹதி ஆகிய 11 கிராமங்களில் சுவிசேஷக் கைப்பிரதிகளின் வாயிலாக சுவிசேஷ வாசனை வீசியது. சோனிதேவி, அமர்குமார் பாஸ்வான், தினேஷ் பாஸ்வான், சுனிதாதேவி, ரிங்கு குமாரி, உபேந்திர பாஸ்வான், சுவாமிகுமார், ஜீவிச் குமார், பப்லு குமார், ராகுல் குமார், சந்தீப் குமார், நகுல் குமார், பூலாதேவி, ரூபம்தேவி ஆகியோர் தொடர் ஊழியத்தின் வாயிலாக தொடப்பட்டு சபை ஆராதனையில் புதிதாக கலந்துகொள்கிறார்கள். பக்கவாதத்தால் பாதிக்கப்பட்டிருந்து படுக்கையில் இருந்த ரஞ்சித்குமார் ஜெபத்தின் பலனால் எழுந்து நடக்கிறார். திருமுழுக்குப்பெற ஆயத்தமாக இருக்கிற விசுவாசிகள் தடையின்றி தேவநீதியை நிறைவேற்றவும், இப்பகுதியிலுள்ள வாலிபர்களின் வாழ்க்கையில் மனமாற்றம் உண்டாகவும், விசுவாசிகளின் பிள்ளைகள் எழுதியுள்ள தேர்வில் தேர்ச்சிப்பெறவும் ஜெபியுங்கள்.

### ஏப்ரல் 23 — லௌகாஹி

ஆம்ஹி கிராமத்தில் சுவிசேஷக் கைப்பிரதிகளின் வாயிலாக சுவிசேஷம் தடையின்றி அறிவிக்கப்பட்டது. அக்னிதேவ்சிங் வீட்டில் ஸ்தோத்திர ஜெபக் கூடுகை நடத்தப்பட்டது. நிர்மலி சபைக்கு செல்லும் பாதை பிரச்சனையை சுமூகமாக பேசி முடிக்க தேவன் உதவி செய்தார். கிதராஹி கிராமத்தில் விஷ்ணுதேவ்யாதவ் குடும்பத்தினருக்கு சுவிசேஷம் அறிவித்து குடும்பத்தினருக்காக ஜெபிக்கப்பட்டது. இவர் மூலமாக இந்த பகுதியில் சுவிசேஷ ஊழியத்திற்கு திறந்தவாசல் காணப்படவும், கிராமங்களுக்குச் சென்று ஊழியம் செய்யவும், சபை கூடுகை தடையின்றி நடத்தப்படவும், புதிய நபர்களை தேவன் சபையிலே சேர்க்கவும், விசுவாசிகள் சாட்சியாக வாழ்ந்து ஆவிக்குரிய வாழ்வில் நிலைத்திருக்கவும், இப்பணித்தள ஊழியருடைய குடும்பத்தினருக்கு விரோதமாக எழும்புகிற தீயசக்திகள் அழிக்கப்படவும் ஜெபியுங்கள்.

### ஏப்ரல் 24 — மணிகாச்சி

மஹாதேவ்போக்கர், கங்கௌலி, பிரஹம்புரா, பூல்வன், அமயி, கேனா, ராஜேபஷ்சிம்டோலா, மணிகாச்சி ஆகிய 8 இடங்களில் சுவிசேஷத்தைக் கேட்டவர்கள் மத்தியில் பின்தொடர் ஊழியம் செய்யப்பட்டது. சபை ஆராதனையில் புதிதாக 6 பேர் கலந்துகொண்டனர். மகாதேவ் போக்கர் பகுதியில் நடத்தப்படுகிற வீட்டுசபையில் உபவாசக் கூடுகை நடத்தப்பட்டது. திரௌஷனிதேவிக்கு தேவன் சுகப்பிரசவத்தைக் கொடுத்து ஆசீர்வதித்தார். சொந்தமாக ஆலயம் கட்டுவதற்கு நிலம் வாங்கப்படவும், திருமுழுக்குப்பெற ஆயத்தமாக இருக்கிறவர்கள் தடையில்லாமல் தேவநீதியை நிறைவேற்றவும், காசநோயால் பாதிக்கப்பட்டிருக்கும் விசலியா, தொழுநோயால் பாதிக்கப்பட்டிருக்கும் ரஞ்சித் சௌபல் ஆகியோரின் அற்புத சுகத்திற்காகவும், சிறுவர்கள் மத்தியில் நடைபெற இருக்கும் விடுமுறை வேதாகம வகுப்பு ஊழியத்திற்காகவும் ஜெபியுங்கள்.

## ஏப்ரல் 25 அந்தாராடி

கங்கராயன் பகுதியில் நடத்தப்பட்ட பெண்களுக்கான சிறப்புக்கூட்டத்தில் 50 பேர் கலந்து கொண்டனர். ரக்வாரி பகுதியில் தேவேந்திர பாஸ்வான் வீட்டில் நடத்தப்படுகிற ஜெபக்கூடுகையில் சுமார் 100 பேர் கலந்துகொண்டு சுவிசேஷத்தைக் கேட்டு ஜெபித்துச் சென்றார்கள். கங்கராயன், டுமரா, பீரோஜ்கட், பிரஹ்மன்டோலா ஆகிய இடங்களில் வீட்டுசபை ஆராதனை நடத்தப்படுகிறது. ஜோகேந்திரன், சோனு, சந்தன், பூஜா, மானவ் விசுவாத்தில் வளர்ந்து வருகின்றனர். சந்தோஷ் பாஸ்வான் மருமகள் அனிதாதேவியின் ஜெபத்தைக் கேட்டு தேவன் சுகப்பிரசவத்தை கொடுத்தார். அசோக் இவரது மனைவி லால்பரிதேவி விசுவாசமுடன் தொடர்ந்து சபை ஆராதனைக்கு வருகின்றனர். காசநோயால் பாதிக்கப்பட்ட கங்கராயன் பகுதியை சேர்ந்த சேதி தொடர் ஜெபத்தால் சுகமானார். திருமணம் முடிந்து பலவருடங்களாகியும் குழந்தை இல்லாமல் இருக்கும் கல்பனாவுக்கு தேவன் குழந்தைச் செல்வத்தை கொடுத்து ஆசீர்வதிக்க ஜெபியுங்கள்.

## ஏப்ரல் 26 மதுபனி

பொக்ரௌனி, அரேர், ஶ்ரீப்பூர் ஹாட்டி, மோகன்பூர், பண்டௌல், ராண்டி, சுகௌனா, தக்ஜரி, பிஷன்பூர், ரஹிகா ஆகிய கிராமங்களில் சுவிசேஷ நற்செய்தி அறிவிக்கப்பட்டது. வீடுசந்திப்பு ஊழியத்தின் வாயிலாக விசுவாசிகளின் குடும்பங்கள் சந்திக்கப்பட்டன. ஞாயிறு ஆராதனையில் சுமார் 80 பேர் கலந்து கொள்கின்றார்கள். திருவிருந்து ஆராதனையில் வீட்டுசபை ஆராதனை விசுவாசிகள் இணைந்து சுமார் 120 பேர் கலந்துகொண்டனர். ஞாயிறு பள்ளியில் 25 சிறுவர்கள் உற்சாகமாக கலந்துகொண்டு வசனத்தைக் கேட்டுவருகிறார்கள். இப்பணித்தள ஊழியருடைய மனைவி சாரதா பெண்களுக்கான கூட்டம் நடத்தி சகோதரிகளை ஜெபத்தில் வழிநடத்தி வருகின்றார். சகரி பணித்தளத்தில் சபை கட்டுவதற்கான நிலம் பத்திரப்பதிவு செய்ய தேவன் உதவி செய்தார். பின்மாற்றத்திலிருந்த சுமண் மீண்டும் சபை ஆராதனையில் கலந்துகொள்கிறார். ஊழியத்திற்கு விரோதமாகக் காணப்படும் மறைமுக எதிர்ப்பு மாறவும் ஜெபியுங்கள்.

## ஏப்ரல் 27 கோர்ஹியாபிங்கி

பகவரி, பிவுனி, பிங்கி, கோர்ஹியா ஆகிய இடங்களில் பின்தொடர் ஊழியம் செய்யப்பட்டது. இப்பணித்தளத்தில் நம்மக்கள் நலத்திட்டப்பணி வாயிலாக சிறுவர்கள் பராமரிக்கப்பட்டு வருகிறார்கள். சமுதாயத்தில் அனைவராலும் புறக்கணிக்கப்பட்ட குடும்பங்களிலிருந்து சிறுவர்களை தெரிந்துகொண்டு

அவர்களுக்கு இம்மையத்தின் வாயிலாக படிப்பு, காலை மற்றும் மதியம் உணவு கொடுத்து உதவிசெய்யப்படுகிறது. அவர்களின் வாழ்க்கைத்தரம் உயர வேதத்தின் அடிப்படையில் நல்லொழுக்கங்களும் கற்றுக்கொடுக்கப்படுகிறது. சிறுவர்கள் மத்தியில் காலை, மாலையில் தியானக் கூடுகை நடத்தப்படுகிறது. சிறுவர்களுடைய பெற்றோர்களுக்கான சிறப்புக் கூட்டம் மாதந்தோறும் நடத்தப்படுகிறது. ஞாயிறு ஆராதனையில் சிறுவர்கள் தவிர விசுவாசிகள் 20 பேர் வரை கலந்து கொள்கின்றார்கள். பகவரி, பிவுனி, பிங்கி ஆகிய இடங்களில் சிறுவர்களுக்கு ஞாயிறு வகுப்புகள் நடத்தப்படுகிறது. நலத்திட்டத்தின் வாயிலாக பராமரிக்கப்படுகிற 60 சிறுவர்களின் ஆவிக்குரிய வாழ்க்கைக்காகவும், படிப்பிற்காகவும் ஜெபியுங்கள்.

## ஏப்ரல் 28 — போக்ரா

டிகௌலி, மதௌல், பைல்கட், பத்தனுக்கா, கங்கௌலி, பூத்நகரா, போக்கரா ஆகிய இடங்களில் சுவிசேஷக் கைப்பிரதிகளின் வாயிலாக சுவிசேஷம் அறிவிக்கப்பட்டது. போக்கரா மற்றும் மதௌல் பகுதியில் ஞாயிறு ஆராதனை நடத்தப்படுகிறது. பைல்கட், போக்கரா, பத்தனுக்கா, டிகௌலி ஆகிய இடங்களிலுள்ள விசுவாசிகளின் வீடுகளில் உபவாசக் கூடுகை நடத்தப்பட்டது. தனித்தாள் ஊழியத்தின் வாயிலாக அநேக வாலிபர்கள் சந்திக்கப்பட்டனர். உடல்நிலை பெலவீனப்பட்ட இப்பணித்தள ஊழியருடைய சுகத்திற்காக ஜெபித்த விசுவாசிகளின் ஜெபத்தைக்கேட்ட தேவன் பூரண சுகத்தைக் கொடுத்தார். ஏந்தல் பாஸ்வானுக்கு மின்சாரம் தாக்கியபோதும் அவரது ஜீவனைத் தேவன் பாதுகாத்தார். இப்பணித்தளத்தில் சொந்தமாக சபைகட்டுவதற்குரிய நிலம் கிடைக்கவும், விசுவாசிகள் விசுவாசத்தில் நிலைத்திருக்கவும், திருமுழுக்குப்பெற ஆயத்தமாக இருக்கிறவர்களுக்காகவும் ஜெபியுங்கள்.

## ஏப்ரல் 29 — சக்ரி

மொக்ரம்பூர், துலார்பூர், சலேம்பூர், சாகர்பூர், சனௌர், பண்டௌல், சுபங்கர்பூர் ஆகிய கிராமங்களில் மத்தியில் பின்தொடர் ஊழியம் செய்யப்பட்டது. கந்து கிராமத்தில் சாந்திதேவி, ஹீராதேவி, ராம்பரிதேவி ஆகியோர் மத்தியில் தனித்தாள் ஊழியம் செய்யப்பட்டது. மாலதிதேவி, கிஷோரி பாஸ்வான், குல்ஷன் திருமுழுக்குப்பெற ஆயத்தமாக உள்ளனர். இப்பணித்தளத்தில் சொந்தமாக ஆலயம் கட்டுவதற்கான நிலம் வாங்கி பத்திரப்பதிவு செய்யப்பட்டது. புதிய ஆத்துமாக்களை தேவன் சபையில் சேர்த்தார். சபை விசுவாசிகள் குடும்பமாக ஆராதனையில் கலந்துகொள்ளவும், போதைப் பழக்கத்திற்கு அடிமைப்பட்டுள்ள சங்கீதாதேவி கணவர் சீதோசதாய் விடுதலையாகவும், சாந்திதேவி, ஹீராதேவி, ராம்பரிதேவி ஆகியோர் குடும்பமாக இரட்சிக்கப்படவும் ஜெபியுங்கள்.

மாதா, பிப்ராயி, காடா, சோபேர், சன்பத்ஹா, லதனியா ஆகிய இடங்களில் சுவிசேஷத்திற்கு ஆர்வம்காட்டியவர்கள் மத்தியில் பின்தொடர் ஊழியம் செய்யப்பட்டது. துல்சியாஹி பகுதியில் விசுவாசி பெட்சன் தாயார் மரணமடைந்தார். இப்பணித்தளத்தில் ஊழியம் தொடங்கி அநேக ஆண்டுகளுக்கு பிறகு முதல் முறையாக கிறிஸ்துவ முறைப்படி அடக்க ஆராதனை நடத்தப்பட்டது. இப்பகுதியில் செயல்படுகிற ஜெம்ஸ் பள்ளி ஆசிரியர்கள் மற்றும் விசுவாசிகள் துணைநின்று காரியங்களை நடத்தினார்கள். மங்கள் குடும்பமாக சபை ஆராதனையில் புதிதாக கலந்துகொண்டனர். மரணப்படுக்கையில் இருந்த ஜெகதீஸ்வர் என்பவருக்காக ஜெபித்த ஜெபம் கேட்கப்பட்டு பூரண சுகமானார். சபை கட்டுமானப்பணி முழுமையாக முடிவடையவும். 12ஆம் வகுப்பு தேர்வு எழுதும் தன்ஷன் குமார், ரேணு குமாரி, சரஸ்வதி குமாரி, சாஜன் குமார் மற்றும் 10ஆம் வகுப்பு தேர்வு எழுதும் சரவணன், சுபா குமாரி, குடியாகுமாரி, லட்சுமி குமாரி ஆகி மாணவ மாணவியர்களுக்காகவும், இப்பணித்தள ஊழியருடைய குடும்பத்தினரின் பாதுகாப்பிற்காகவும் ஜெபியுங்கள்.




# GEMS Promotional Centers & Contacts

## National Promotional Center

Mr. Russelraj (Bell Shath), 30, 5th Main Road, Postal Colony, 2nd Stage,

Sanjaynagar, Bengaluru – 94. Ph: 9661504639

## Tamil Nadu - Promotional Admin Office

Mr. J.Ravi David, GEMS, No. 14/1, Jeba Nagar, Vasanthapuram South Street,

Near Vijaya Garden, Tirunelveli – 627005. Ph: 9789135842

## Tamil Nadu - State Promotional Center

Mr. Ebenezer, No. 21, Sharon Church Street, Booman Nagar,

Madurai – 625018. Ph: 9865583563

## Tamil Nadu - Regional Promotional Centers

Chennai – Mr. Jesudason, No. 11, 13th Cross Street, Chrompet, Chennai – 600044. Ph: 9751054664

Madurai – Mr. Jebakumar, No. 3/480-1, Vivekanandar Street, Surveyor Colony, Madurai – 625007. Ph: 9442934613

Trichy – Mr. Ernest Ravi, Mahanaim, 1, Abdul Gafoor Street, Kajah Nagar, Trichy – 620020. Ph: 9443555577

Tirunelveli – Mr. Johnraj, 14/109A, 10th Street, Shanthi Nagar, Palayamkottai – 627002. Ph: 9443113322

Coimbatore – Mr. Asirvatham, Rehoboth, 6A/170-A/6, Gandhi Nagar, Near Women's Hostel, Sundarapuram, Coimbatore – 641024. Ph: 9443429735

## Other States Promotional Centers

| | |
|---|---|
| Bengaluru | - Mr. Witton James – 9448517025, Dr. Sam – 9844287046, Mr. Godwin – 8050457335 |
| Delhi NCR | - Mr. Siva - 7022008675 |
| Hyderabad | - Mr. Kingston – 9440345681 |
| Kerala | - Mr. Kanakaraj – 9486357950, Mr. Kaniraj – 9495896522 (Munnar) |
| Mumbai | - Mr. Kanagaraj – 8655358343, Mr. Sundaraj – 9869223377 |
| Puducherry | - Mr. Paul Sundar – 8521577762, Mr. Illango – 8248832423 |
| Pune | - Mr. Joseph Ravindaran – 9423006688 |
| Vijayawada | - Mr. Suresh – 9441207275, Mr. Sampath – 8409962144 |
| Visakhapatnam | - Mr. Abisekaraj – 9440429895 |

# Tamil Nadu - Promotional Centers

Alangulam- Mr. Arockiyam – 9965004591

Arakonam - Mr. Kiruba – 7339036255

Arupukottai - Mr. Pooviah – 9486666570

Athoor - Mr. Prakash – 9524533777

Chennai - Mr. Stephen – 9444763141

Mr. N. Stephen – 9789904762

Mr. Alexander Martin – 9940448999

Chidambaram - Mr. Abraham – 9788886110

Coimbatore - Mr. D.Ranoji Sindhiya – 9443367278

Mr. Emerson Devaraj – 9789300400

Mr. Ravi – 8610388922

Coonoor - Mr. Vinoth – 6379489469

Dharapuram - Pr. Siluvai – 9486030774

Dharmapuri - Mr. Kennedy – 9944395889

Erode - Mr. Joseph Raj – 9384737802

Hosur - Mr. James – 9994248957

Kalakad - Mr. Mathiazhagan – 9486428329

Kanyakumari - Mr. Johnson – 9443340946

Karaikudi - Mr. Kiruba Jesudas – 7867822817

Karur - Mr. Kumar – 9865841450

Kodaikanal - Mr. Godwin – 9443221776

Kovilpatti - Mr. Kennedy – 9944755640

Mrs. Viji Albert – 9025152550

Krishnagiri - Mr. Jesudas – 9443237101

Kumbakonam - Mr. Sundar Singh – 9443372078

Marthandam - Mr. Jebasingh – 9788689771

Mettupalayam - Mr. Augustine – 9443023247

Mudalur - Mr. Charles – 9976441440

Nagapattinam - Mr. John Paul – 9443279502

Nazareth - Mr. Abraham – 9442094110

Nagercoil - Mr. Nedunchezhian – 9894965520

Neyveli - Mr. Vanathuvaraj – 9486790633

Palani - Mr. Paul Thiyagarajan – 9443013472

Palayamkottai - Mr. Kunasekar – 9942808321

Rajapalayam - Mr. Yosabath – 8438149117

Rasipuram - Mr. Novah Nelamegam – 7010722096

Sawyerpuram - Mr. Selvakumar – 9626851323

Salem - Mr. Gunasekaran – 9442337027

Sivakasi - Mr. Dharmaraj – 9843088840

Mr. Devadoss – 9442775114

Somanur - Mr. Thomas – 9488444040

Thanjavur - Mr. Joseph – 9360311488

Tindivanam - Mr. Rajan – 9994481306

Tirumangalam - Mr. Sudhakar – 8521577762

Tirunelveli - Mr. Yesumani – 8870393213

Tiruppathur - Mr. Kannan – 7639372360

Tiruppur - Mr. Asir Selvam – 9842298244

Tiruvannamalai - Mr. George – 8754211843

Trichy - Mr. Iwin Thomas – 9489520179

Tuticorin - Mr. Manikaraj – 9442166061

Mr. Sathiyaseelan – 9442210629

Mr. Ulaganathan – 9843007767

Valliyoor - Mr. Balan – 9488064199

Vaniyambadi - Mr. Uvaraj – 8072227048

Vellore - Mr. Mohan – 9003635959

Villupuram - Mr. Emmanuel – 9865005056




19 வயது முதல் 25 வயது வரையிலான இளம் தலைவர்களை பணித்தளங்களிலிருந்து தெரிந்தெடுத்து, அவர்களை உருவாக்கி, ஊழியத்திற்கு ஆயத்தப்படுத்தும் Gen-NEXT பயிற்சி மையம் மார்ச் 21 அன்று சிக்காரியா வளாகத்தில் ஜெபத்துடன் திறக்கப்பட்டது. பயிற்சியில் பங்குபெறுபவர்களுடன் ஜெம்ஸ் ஊழியர்களும் இந்நிகழ்ச்சியில் கலந்துகொண்டனர். தேவ நாமம் மகிமைப்பட்டது.




*Head office*

11,13th Cross Street, New Colony,
Chrompet, Chennai - 44
Ph : 044-22386031, 044-22380295

**Field. office :**

GEMS, Sikaria, Indrapuri - 821 308
Rohtas Dist., Bihar. Ph. : 06184 234567

Railway station & couriers centre : Dehri-on-Sone
Website : www.gemsbihar.org
E-mail : gems@gemsbihar.org

*if undelivered please return to*

Regd. office :
GEMS Educational and Media Services
14/1, Jeba Nagar, Vasanthapuram South St.,
Near Vijaya Garden, Tirunelveli
Pin - 627 005. Ph : 9488771655
E-Mail : nellaioffice@gemsbihar.org

**Private circulation**

தனிப்பிரதி ரூ.10/-
ஆண்டு சந்தா ரூ.100/-

To

..............................................................

..............................................................

..............................................................

..............................................................